இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 344 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஆடி 08 – புதன்கிழமை 24 ஜுலை 2024 – கோவை ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 344 : Thiruvalluvar Year - 2055 - Aadi 08 - Wednesday 24 July 2024 - Kovai ★★ 12 Pages ₹ 5.00

### ‘திராவிட மாடல்’ அரசின் புதுமைத் திட்டம்! நடுத்தர மக்களின் கனவை எளிதாக்கிட

# ‘ஆன்லைனி’ல் உடனடியாகக் கட்டட அனுமதி!




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (22.07.2024) தலைமைச் செயலகத்தில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கீழ் இயங்கும் நகர் ஊரமைப்பு இயக்ககத்தின் சார்பில், தமிழ்நாட்டில் முதல் முறையாக பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினர் மற்றும் நடுத்தர மக்கள் இணைய தளம் வாயிலாகச் சுயசான்றிதழ் அடிப்படையில் அதிகபட்சம் 2,500 சதுர அடி பரப்பளவு கொண்ட மனையிடத்தில் 3,500 சதுர அடி அளவிற்குள் கட்டப்படும் குடியிருப்பு கட்டுமானத்திற்கு உடனடியாக ஒற்றைச் சாளர முறையில் கட்டட அனுமதிகளைப் பெறும் ஒருங்கிணைந்த புதிய திட்டத்தை தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சி துறை அமைச்சர் சு. முத்துசாமி, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, நகர் ஊரமைப்பு இயக்குநர் பா.கணேசன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## திட்டத்தைத் தொடங்கி வைத்தார் முதல்வர் மு.க.ஸ்டாலின்!

**சென்னை, ஜுலை 24-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (22.07.2024) தலைமைச் செயலகத்தில், வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறையின் கீழ் இயங்கும் நகர் ஊரமைப்பு இயக்ககத்தின் சார்பில், தமிழ்நாட்டில் முதல் முறையாக பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினர் மற்றும் நடுத்தர மக்கள் இணைய தளம் வாயிலாகச் சுயசான்றிதழ் அடிப்படையில் அதிகபட்சம் 2,500 சதுர அடி பரப்பளவு கொண்ட மனையிடத்தில் 3,500 சதுர அடி அளவிற்குள் கட்டப்படும் குடியிருப்பு கட்டுமானத்திற்கு உடனடியாக ஒற்றைச் சாளர முறையில் கட்டட அனுமதிகளைப் பெறும் ஒருங்கிணைந்த புதிய திட்டத்தை தொடங்கி வைத்து, 10 பயனாளிகளுக்கு கட்டுமான அனுமதி ஆணைகளை வழங்கினார்.**

### அனுமதியை எளிதாகப் பெற நடவடிக்கை!

2024-2025ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையில், சுயசான்றிதழ் மூலமாகப் பொதுமக்கள் கட்டட அனுமதி பெறுவதற்குப்புதியவசதிஅறிமுகப்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதன்படி, 2,500 சதுர அடி வரையுள்ள மனையிடத்தில், 3,500 சதுர அடி கட்டடப் பரப்பளவிற்குள் தரைத்தளம் அல்லது தரைத்தளம் மற்றும் முதல் தளம் கொண்ட 7 மீட்டர் உயரத்திற்குட்பட்டு குடியிருப்புக் கட்டடத்தைக் கட்டுவதற்கு விரும்பும் பொதுமக்கள் சுயசான்றிதழ் திட்டத்தின் கீழ் கட்டட அனுமதியை எளிதாகவும் உடனடியாகவும் பெற முடியும்.

சுயசான்றிதழ் திட்டம் என்பது, பொது மக்கள் கட்டட அனுமதிக்காக அலுவலகங்களுக்குச் சென்றுவரும் நேரத்தை முழுமையாக தவிர்த்து, அதிகபட்ச வெளிப்படைத் தன்மையுடனும், நடைமுறையில் உள்ள கட்டட விதிகளை எளிமைப்படுத்தியும் மக்கள் கடைப்பிடிப்பதற்கு மேற்கொள்ளப்படும் ஒரு புதுமையான முயற்சியாகும்.

தற்போதுள்ள ஒற்றைச் சாளர முறையின் மூலம் ஒப்புதல் பெறுவதைக் காட்டிலும், இந்தச் சுயசான்றிதழ் திட்டத்தில் ஒப்புதல் பெறும் நடைமுறை மிகவும் எளிதான வகையில் அமைந்து பொது மக்களுக்குப் பெரிதும் பயனளிக்கும்.

இது தொடர்பாக, ஒற்றைச் சாளர முறையில் சுயசான்றிதழ் திட்டத்திற்கான மென்பொருள் தொகுப்பு உருவாக்கப் பட்டு, ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

### ஒற்றைச்சாளர முறையில் பரிசீலனை!

தற்போது, குடியிருப்புக் கட்டடங்களுக்கான கட்டட அனுமதி பெறுவதற்காகப் பெறப்படும் மொத்த விண்ணப்பங்களில் 72 விழுக்காடு ஊராட்சிகளிடமிருந்தும், 77 விழுக்காடு பேரூராட்சிகளிடமிருந்தும், 79 விழுக்காடு நகராட்சி மற்றும் மாநகராட்சிகளிடமிருந்தும் பெறப்படுகிறது. அவ்விண்ணப்பங்கள் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளால் ஒற்றைச் சாளர முறையில் பரிசீலனை செய்யப்படுகின்றன.

பொதுமக்கள் பயன்பெறும் வகையில், இப்புதிய திட்டத்தின் கீழ் அனுமதி பெறும் கட்டடங்களுக்கும் சாலைக்கும் இடையில், தளர்வு (1.5 மீட்டராகக் குறைக்கப்பட்டுள்ளது), கூராய்வுக்கட்டணம் (scrutiny fee) (சதுர மீட்டருக்கு ரூ.2), உள்கட்டமைப்பு மற்றும் வசதிகளுக்கான (I & A) கட்டணங்கள் (சதுர மீட்டருக்கு ரூ.375) ஆகியவற்றில் விலக்கு அளிக்கப்படுகிறது.

விண்ணப்பதாரர்கள் தேவையான கட்டணங்களைச் செலுத்தியபின் விரைவுத் துலங்கல் (QR) குறியீட்டுடன் கட்டட அனுமதி மற்றும் வரைபடங்களை உடனடியாகப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மேலும், முன் இடக்கள ஆய்வு மேற்கொள்வதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டு, உடனடியாகக் கட்டுமானப் பணி மேற்கொள்வதற்கும் வழிவகை செய்து கட்டட முடிவுச் சான்று பெறுவதிலிருந்தும் விலக்கு அளிக்கப்படுகிறது.

இந்த நிகழ்ச்சியில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சி துறை அமைச்சர் சு. முத்துசாமி, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, நகர் ஊரமைப்பு இயக்குநர் பா.கணேசன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### பணம் இருந்தால் தேர்வு அமைப்பையே விலைக்கு வாங்கலாம்!

## ‘நீட்’ தேர்வு முறையே மோசடியானது!

### மக்களவையில் ராகுல் காந்தி கடும் விமர்சனம்!



புதுடெல்லி, ஜுலை 24-

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் நேற்று முன்தினம் தொடங்கியுள்ள நிலையில் நீட் தேர்வு முறைகேடு குறித்த காரசாமான விவாதம் நடைபெற்றது.

அந்த வகையில் பாராளுமன்ற எதிர்கட்சித் தலைவர் ராகுல் காந்தி பேசுகையில், மொத்த நாட்டுக்கும் நீட் தேர்வு மட்டுமன்றி நாட்டில் நடக்கும் முக்கியமான தேர்வுகள் நடத்தப்படும் முறையில் தீவிரமான பிரச்சினை உள்ளது தெரிகிறது.

அமைச்சர் [மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான்] இந்த பிரச்சினைகளுக்கு தன்னைத் தவிர மற்ற அனைவர் மீதும் குற்றம்சாட்டி வருகிறார். அவருக்கு இந்த விவகாரத்தில் என்ன நடந்து கொண்டிருக்கிறது என்ற அடிப்படையான புரிதல் இல்லை.

நாட்டில் உள்ள மில்லியன் கணக்கான மாணவர்கள் இந்த விவகாரத்தில் என்னதான் நடக்கிறது என்று கவலையுடன் உள்ளனர், இந்தியாவின் தேர்வு முறை என்பதே மோசடியானது என்று அவர்கள் நம்பத் தொடங்கியுள்ளனர்.

நீங்கள் பணக்காரராகவும் உங்களிடம் அதிக பணமும் இருந்தால் இந்தியாவின் தேர்வு அமைப்பையே விலைக்கு வாங்கி விடலாம் என்று மக்கள் தற்போது கருதுகின்றனர். அதையே எதிர்தரப்பில் உள்ள நாங்களும் கருதுகிறோம் என்று கூறினார்.

முன்னதாக இந்த வருட நீட் தேர்வில் வினாத்தாள் கசிவு, அதிக மதிப்பெண் உள்ளிட்ட பல்வேறு முறைகேடுகள் நடந்துள்ளது உறுதியானது குறிப்பிடத்தக்கது என்றும் ராகுல் காந்தி கூறினார்.

## ‘நீட்’ தேர்வுக்கு எதிர் முழக்கம்!

### நாடாளுமன்ற இரு அவைகளிலும் தி.மு.க. சார்பில் பலமாக எதிரொலிக்கிறது!

புதுடெல்லி, ஜுலை 24-

பல மாணவர்களின் உயிரிழப்புக்கு காரணமாகி, முறைகேடுகளுக்கு வழிவகுக்கும் நீட் நுழைவுத் தேர்வை ரத்து செய்ய வேண்டும் என்று நாடாளுமன்றத்தில் தி.மு.க. வலியுறுத்தியது.

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் நேற்று முன்தினம் தொடங்கியதும், நீட் முறைகேடு குறித்து காங்கிரஸ், திமுக, சமாஜ்வாதி உள்ளிட்ட இந்தியா கூட்டணி கட்சிகள் பிரச்சினை எழுப்பின. நீட் நுழைவுத்தேர்வு குறித்து பேசிய திமுக எம்.பி. கலாநிதி வீராசாமி, நாட்டின் மிக முக்கிய பிரச்சினையாக உருவெடுத்துள்ள ‘நீட்’ தேர்வு குறித்து கேள்வி எழுப்பும் போது அவையில் பிரதமர் இல்லாததற்கு கண்டனம் தெரிவித்தார். நீட் நுழைவுத் தேர்வால் அனிதா முதல் பல மாணவர்கள் உயிரிழந்துள்ளதை சுட்டிக்காட்டிய கலாநிதி வீராசாமி, முறைகேடுகளுக்கு வழிவகுக்கும் நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும் என்று வலியுறுத்தினார்.

நீட் முறைகேடுகளுக்கு பொறுப்பேற்று ஒன்றிய கல்வி அமைச்சர் பதவி விலக வேண்டும் என்றும் திமுக எம்.பி. கலாநிதி வீராசாமி வலியுறுத்தினார்.

அனைத்து மாநிலங்களுக்கும் நீட் ஒரு பிரச்சினையாக மாறி உள்ளது. நீட் தேர்வுக்கு ஆரம்பம் முதலே தமிழ்நாடு கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகிறது

நீட் தேர்வு வேண்டுமா? வேண்டாமா? என்பதை தீர்மானிக்கும் அதிகாரத்தை மாநிலங்களுக்கு அளிக்க வேண்டும். நீட் தேர்வு ரத்து செய்யப்படுமா என்ற கேள்வி என்பது பல மாணவர்களின் மரணத்தின் வெளிப்பாடாகும். ‘நீட்’ தேர்வை ரத்து செய்ய வேண்டும் என நான் மீண்டும் வலியுறுத்துகிறேன் என்று கலாநிதி வீராசாமி கூறினார்.

**மாநிலங்களவையில் பி.வில்சன் வலியுறுத்தல்!**

தமிழ்நாட்டிற்கான பேரிடர் நிதியை ஒன்றிய அரசு விடுவிக்க வேண்டும் என்றும் தற்காலிக நிவாரணமாக 3 ஆயிரம் கோடி ரூபாயை உடனடியாக வழங்க வேண்டும் என்றும் நாடாளுமன்ற மாநிலங்களவையில் கழக எம்.பி. வில்சன் வலியுறுத்தினார்.

மாநிலங்களவையில் பேசிய வில்சன், கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் தமிழ்நாட்டில் ஏற்பட்ட இரண்டு பேரிடர்களுக்கு பிறகு தமிழ்நாடு அரசு 37 ஆயிரத்து 907 கோடி ரூபாய் தேசிய பேரிடர் நிவாரண நிதி வழங்க வேண்டுமென கோரியதை சுட்டிக்காட்டினார். ஒன்றிய அரசு 276 கோடி ரூபாய் மட்டுமே ஒதுக்கீடு செய்தது என்று கூறிய அவர், தமிழ்நாட்டில் சீரமைப்பு பணிகளை மேற்கொள்ள ஒன்றிய அரசு உடனடியாக 3 ஆயிரம் கோடி ரூபாயை விடுவிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

இரண்டாம் கட்ட சென்னை மெட்ரோ ரயில் திட்டத்திற்கும், கோவை, மதுரை, திருச்சி மெட்ரோ ரயில் திட்டங்களுக்கும் ஒன்றிய அரசு உடனடியாக ஒப்புதல் வழங்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் ஏராளமான ஒன்றிய அரசின் திட்டங்களுக்கு, ஒன்றிய அரசு நிதி ஒதுக்காமல் இருப்பதை சுட்டிக்காட்டிய தி.மு.க. எம்.பி. வில்சன், நிதி ஒதுக்கீட்டில் தமிழ்நாடு தொடர்ச்சியாக வஞ்சிக்கப்படுகிறது என்று குற்றம்சாட்டினார்.

தமிழ்நாட்டின் வளர்ச்சி, இந்தியாவின் வளர்ச்சி என்பதை ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் நினைவில் கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்ட வில்சன், நிலுவையில் உள்ள அனைத்து திட்டங்களுக்கும் ஒப்புதல் வழங்க, சம்பந்தப்பட்ட துறைகளின் அமைச்சர்களுக்கு பிரதமர் மோடி அறிவுறுத்த வேண்டும் என்று வலியுறுத்தினார். தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டிய நிதியை கால தாமதம் இல்லாமல் உடனடியாக விடுவிக்க வேண்டும் என்றும் வில்சன் எம்.பி. கேட்டுக்கொண்டார்.

‘நீட்’ முறைகேடு குறித்து பேசிய பி.வில்சன் அவர்கள், பல மாணவர்களின் உயிரிழப்புக்கு காரணமாகவும், வினாத்தாள் கசிவு, கருணை மதிப்பெண், ஆள் மாறாட்டம் உள்ளிட்ட முறைகேடுகளுக்கு வழிவகுத்திடும் வகையில் உள்ள நீட் நுழைவுத் தேர்வை ரத்து செய்திட வேண்டும் என வலியுறுத்தினார்.

### ‘நீட்’ தேர்வு விவகாரம்:

## மக்களவையில் எதிர்க்கட்சிகள் அமளி!

புதுடெல்லி, ஜுலை 24 –

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் நேற்று முன்தினம் தொடங்கியது. இந்த தொடர், ஆகஸ்டு 12ந்தேதி வரை நடைபெறும். இதில், மத்திய பட்ஜெட் இன்று தாக்கல் செய்யப்படும். பா.ஜ.க. 3வது முறையாக ஆட்சியமைத்த பின்னர் முதன்முறையாக தாக்கல் செய்யப்படும் பட்ஜெட் இதுவாகும். அதனால், முன்னெப்போதும் இல்லாத வகையில் இந்த கூட்டத்தொடர் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

இதில், மத்திய நிதி மந்திரி நிர்மலா சீதாராமன் பட்ஜெட்டை தாக்கல் செய்து பேசவுள்ளார். இதனை தொடர்ந்து, அதன் மீது விவாதம் நடைபெறும். எனினும், இந்த கூட்டத்தொடரில் ஜம்மு மற்றும் காஷ்மீரில் நடந்த பயங்கரவாத தாக்குதல், மணிப்பூர் வன்முறை, ரெயில் விபத்துகள், நீட் தேர்வு உள்ளிட்ட பல்வேறு விவகாரங்களை எழுப்ப எதிர்க்கட்சிகள் திட்டமிட்டு உள்ளன.

இந்த சூழலில், நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும், 2023–24 நிதியாண்டுக்கான பொருளாதார ஆய்வறிக்கை தாக்கல் செய்யப்படுகிறது. 2024–25 நிதியாண்டுக்கான பட்ஜெட் தாக்கல் செய்யப்படவுள்ள நிலையில், பட்ஜெட்டுக்கு முந்தின ஆவணங்களை நாடாளுமன்றத்தில் மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்தார்.

இதன்படி, 2023–24 நிதியாண்டுக்கான பொருளாதார ஆய்வறிக்கை நேற்று முன்தினம் மதியம் 1 மணியளவில் மக்களவையிலும், மதியம் 2 மணியளவில் மாநிலங்களவையிலும் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த சூழலில், நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடர் நேற்று முன்தினம் காலை தொடங்கியது. இதில் அவையில், நீட் தேர்வில் வினாத்தாள் கசிவு பற்றி எதிர்க்கட்சிகள் அமளியை கிளப்பின. நீட் தேர்வு முறைகேடு விவகாரம் பற்றி மத்திய கல்வி மந்திரி தர்மேந்திர பிரதான் அவையில் விளக்கம் அளித்தார்.